சார்பு நீதிமன்றம், பவானி, ஈரோடு மாவட்டம்.

**முன்னிலை : திரு.என்.ராமநாதன்.பி.எல்.,**
**சார்பு நீதிபதி, பவானி.**

2017ம் ஆண்டு ஜுலை திங்கள் 14-ம் நாள் வெள்ளிக்கிழமை.

(திருவள்ளுவராண்டு 2047, ஹேவிளம்பி ஆண்டு, ஆனித் திங்கள் 30 - ம்நாள்)

**ஹெச்.எம்.ஓ.பி. எண். : 01/2017.**

1.ஜி.வசந்தகுமார்
2.கு.நர்மதா .. மனுதாரர்கள்.

இம்மனு இந்நீதிமன்றத்தில் என் முன்பு 07.07.2017-ம் தேதியன்று விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் பி.மோகன், பி.கே.சந்திரன், வி.குமரேசன், எஸ்.பாலகிருஷ்ணன் மற்றும் பி.எம்.சுபாஷ் ஆகியோர்களும் ஆஜராகியும், ஆவணங்கள் பரிசீலனை செய்தும், மனுதாரர்கள் தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும் இறுதியாக இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்திரவு.**

01. மனுதாரர்களுக்குள் கடந்த 09.09.2013-ம் தேதியன்று நடைபெற்ற திருமண பந்தத்தினை ரத்து செய்து உத்தரவு வழங்கக் கோரி இந்து திருமணச் சட்டம் பிரிவு 13-பின்படி மனுதாரர்களால் கூட்டாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**02. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சாராம்சம் :**

மனுதாரர்கள் இருவரும் கணவன், மனைவி ஆவர். முதல் மனுதாரர் சேலம் வி.எஸ்ஏ. பொறியியல் கல்லூரியில் உதவி பேராசிரியராகவும், இரண்டாம் மனுதாரர் பவானி கனரா வங்கியில் விவசாய துறை அதிகாரியாகவும் பணிபுரிந்து தற்போது சேலம் செவ்வாய்பேட்டையில் கிளை மேலாளராகவும் பணிபுரிந்து வருகின்றனர். மனுதாரர்களுக்கு கடந்த 09.09.2013ம் தேதியன்று திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோவிலில் இந்துமத வழக்கப்படியும், சாதி, சமய சம்பிரதாயங்களின் -படியும், இருவரது பெற்றோர் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது.

திருமணத்திற்கு பின்பு மனுதாரர்கள் இருவரும் முதல்மனுதாரர் வீட்டில் அவரது இளைய சகோதரி மற்றும் பெற்றோர்கள் ஆகியோர்களுடன் தங்கள் திருமண வாழ்க்கையை துவங்கினர். இந்நிலையில், உபயமனுதாரர்களுக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டது. இந்நிலையில், கடந்த 16.03.2014 தேதியன்று முதல்மனுதாரரின் தந்தை சேலம் ஐஸ்வர்யா மருத்துமனையில் கடுமையான நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு இறந்துவிட்டார். அதன்பின்னிட்டு உபயமனுதாரர்கள் இருவருக்கும் நாளுக்கு நாள் கருத்து வேறுபாடு அதிகமாகி இருவரும் திருமண பந்தத்திலிருந்து பிரிந்து வாழ்ந்து வந்தனர். பலமுறை இருவரும் சேர்ந்து வாழ முயற்சி செய்தும், இரண்டாம் மனுதாரர் முதல் மனுதாரர் மீது பவானி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் எம்.சி. 21.2014 வழக்கு தாக்கல் செய்தார். முதல் மனுதாரர் இரண்டாம் எதிர்மனுதாரருக்கு எதிராக குடும்ப நல நீதிமன்றத்தில் எப்.சி.ஓ.பி. 457/2015 என்ற வழக்கு தாக்கல் செய்தார். மேற்படி வழக்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்திரவின்பேரில் ஹெச்.எம்.ஓ.பி. 61/2016 எண்ணாக மாறுதல் செய்யப்பட்டு இருவீட்டு பெரியவர்கள் சட்டப்ப நீதிமன்றத்தில் எடுத்த அனைத்து முயற்சிகளும் பயனற்றுபோய் திருமண பந்த உறவு முறிந்துவிட்டதால், இரண்டாம் மனுதாரர் தாக்கல் செய்த எம்.சி21/2014 மனு மற்றும் சி.எம்.பி. எண். 1254/2016 என்ற தனி முறையீட்டையும் இரண்டாம் மனுதாரரும், முதல் மனுதாரர் தாக்கல் செய்த ஹெச்.எம்.ஓ.பி.மனு எண்.61/2016 மனுவையும் உபயமனுதாரர்கள் திரும்ப பெற்றுக் கொள்ள சம்மதித்தனர். மேலும் உபயமனுதாரர்களுக்குள் நகைகள், கார் மற்றும் சீர்வரிசைப் பொருட்கள் அனைத்தையும் இருவரும் பெற்றுக் கொண்டதால் இருவருக்கும் எந்தவித கொடுக்கல் வாங்கலும் இல்லை. எனவே, உபயமனுதாரர்களின் எதிர்கால நலனை கருத்திற்கொண்டு இருவரும் மனமொத்த விவாகத்து செய்து கொள்வதென முடிவு செய்துள்ளனர். இறுதியாக, உபயமனுதாரர்களுக்குள் இனிமேலும் ஒன்றாக இணைந்து இல்லறம் நடத்துவதற்கான சாத்தியக் கூறுகள் எதுவும் ஏற்படாததால் மனுதாரர்களுக்குள் கடந்த 09.09.2013-ம் தேதியில் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து உத்தரவு வழங்கக் கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளனர்.

03. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய வினா யாதெனில்? இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

04. மனுதாரர்கள் ம.சா.1. மற்றும் ம.சா.2. ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1. மற்றும் ம.சா.ஆ.2. வரையிலான சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

05. **வினாவிற்கான தீர்வு :**

5(1) மனுதாரர்களுக்குள் கடந்த 09.09.2013-ம் தேதியன்று நடைபெற்றுள்ள திருமண பந்தத்தினை ரத்து செய்து விவாகரத்து வழங்கக் கோரி இந்து திருமணச் சட்டம் பிரிவு 13பி-ன்படி மனுதாரர்கள் கூட்டாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

5(2) மனுதாரர்கள் தங்களுக்கு 09.09.2013-ம் தேதியன்று மனுதாரர்களின் ஜாதி குல வழக்கப்படி இருவரது பெற்றோர் முன்னிலையில் திருச்செங்கோடு அர்த்நாரீஸ்வரர் திருக்கோவிலில் வைத்து திருமணம் நடைபெற்று, திருமணத்திற்கு பின்பு மனுதாரர்கள் இருவரும் முதல் மனுதாரரின் வீட்டில் வாழ்க்கை துவங்கிய போது, உபயமனுதாரர்களுக்குள் கருத்து வேறுபாடுகள், ஒத்துப் போகாத தன்மை, மனமாற்றம் ஆகிய காரணங்களால் இருவரும் சேர்ந்து வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்டு, அதன் தொடர்ச்சியாக உபயமனுதாரர்கள் தற்போது பிரிந்து விட்டதாகவும், இன்றளவும் பிரிந்து வாழ்வதாகவும், பலமுறை பஞ்சாயத்து பேசப்பட்டும் நல்ல தீர்வு ஏற்படவில்லையென்றும், எனவே, மனுதாரர்கள் இருவரும் விவாகரத்து பெற சம்மதித்து மனு தாக்கல் செய்துள்ளதாகவும், கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

5(3) மனுதாரர்கள் இம்மனுவை 23.12.2016 தேதியன்று தாக்கல் செய்து 02.01.2017 தேதியன்று கோப்பிலெடுக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் மனுதாரர்கள் இருவரும் 17.02.2017 தேதியன்று நீதிமன்றத்தில் ஆஜராகி தாங்கள் மனுப்படி விவாகரத்து பெறுவதில் உறுதியாக இருப்பதாக கூறினார்கள். எனவே, மனு ஒத்திவைக்கப்பட்டது.

மனுதாரர்கள் இருவரும் ம.சா.1. மற்றும் ம.சா.2.ஆக 07.07.2017 தேதியன்று விசாரிக்கப்பட்டனர். மனுதாரர்கள் இருவருக்கும் 6 மாத கால அவகாசம் வழங்கியும், எந்தவித பலனும் இல்லாததாலும், அவர்கள் இருவரது சாட்சியத்திலிருந்து, மனுதாரர்கள் இனிமேல் சேர்ந்து வாழ்வதற்கான சாத்தியக்கூறு இல்லை என தெரிய வருவதாலும் இந்நீதிமன்றம் அவர்களது விவாகத்தை ரத்து செய்வது அவர்களிருவரின் நலனுக்கு உகந்தது என முடிவு செய்து, அதன்பால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என தீர்மானிக்கிறது. இவ்வாறாக இந்த வினாவிற்கு விடை காணப்படுகிறது.

06. இறுதியாக, உபயமனுதாரர்களுக்கிடையே கடந்த 09.09.2013-ம் தேதியன்று நடைபெற்றுள்ள திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்கி உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, அச்சு எடுக்கப்பட்டு, என்னால் சரிபார்த்து திருத்தப்பட்டு, 2017ம் ஆண்டு ஜுலை திங்கள் 14-ம் நாள் என்னால் இம்மன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம் ) என்.ராமநாதன்
சார்பு நீதிபதி,
பவானி.

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1. | 09.09.2013 | திருமண விழா அழைப்பிதழ். |
| ம.சா.ஆ.2 | - | திருமண புகைப்படம். |

**சாட்சிகள் பட்டியல்.**

**மனுதாரர்கள் தரப்பில்**

| | |
|---|---|
| ம.சா.1. | சி.வசந்தகுமார் |
| ம.சா.2. | கு.நர்மதா. |

(ஒம் ) என்.ராமநாதன்
சார்பு நீதிபதி,
பவானி.

/உண்மை நகல்/

சார்பு நீதிபதி,
பவானி.

**அசல்/வரைவு தீர்ப்புரை**

**ஹெச்.எம்.ஓ.பி.எண்.01/2017**

நாள் **:** 14.07.2017.

**சார்பு நீதிபதி, பவானி.**